ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களே, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்திக்கொள்ளவேண்டுமென்பதற்காக அவர்கள் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள். ஆகவே மனிதாபிமான அடிப்படையிலும், நியாயமான அடிப்படையிலும் பரிசீலித்து, மீண்டும் அவர்களைப் பணியிலமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்றிலும் தற்காலிகமாக, ஓராண்டுக்கு மட்டுமே பணி என்ற முறையிலே சென்ற ஆண்டு அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அவர்களது கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து வருகிறது.

(இ) பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி குறித்து.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் தேவையில்லாத விவகாரம். பத்திரிகையிலே வந்ததை வைத்துப் பேச வேண்டாம். அது முறையல்ல. அது அவைக்குறிப்பில் இருக்கத் தேவையில்லை. தமிழ்நாடு தான் நல்ல அட்மினிஸ்ட்ரேஷன் நடத்துகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் பெஸ்ட் அட்மினிஸ்ட்ரேஷன் நடத்துகிறது, அசெம்பிளி உட்பட. உலகத்திலேயே மற்ற அசெம்பிளிகளிலே, தமிழ்நாடு அசெம்பிளி தான் சிறந்த அசெம்பிளி. வெளி நாட்டில் எல்லாம் போய்ப் பார்த்துவிட்டுத் தான் சொல்கிறேன். Holland, House of Commons போன்றவைகளைப் பார்த்து விட்டு வந்துதான் சொல்கிறேன். உலகத்திலேயே சிறந்தவர்கள்தான் இங்கேயிருக்கிறார்கள். நல்ல பண்புள்ளவர்கள், அன்புள்ளவர்கள், எதையும் மறக்கக்கூடியவர்கள் தான் இருக்கிறார்கள். வெளிநாட்டு எம்.எல்.ஏ., எம்.பி.-க்களைப் பார்த்தபோது தான் இங்கே இருக்கிறவர்கள் சிறந்த நண்பர்கள் என்று தெரிந்துகொள்ள முடிந்தது. நம் நாட்டைப்போல் சிறந்த நாடு உலகிலேயே கிடையாது. 'We are the best in Character and everything'.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.